REGD. No. M. 6311 தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 17உ திங்கள் (2—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 18உ செவ்வாய் (3—12—57) [இதழ் 146

அந்த நாளும் வந்திடாதோ!

கான்பூர், நவ. 30—

"எஜமான்—சேவகன் என்ற மனப்பான்மை ஒழியும் நாள் வெகுதூரத்தில் இல்லை; தொழிலாளர்களை, நமது முயற்சிகளில் கூட்டுப்பங்காளிகளாக நாம் கருதவேண்டும்" என்று பண்டிதர் கூறியிருக்கிறார்.

டெல்லியின் ஓரவஞ்சனை கண்டு ஆந்திர வர்த்தகக் கழகம் குமுறல்

'தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது'

'மத்திய சர்க்காரிடம் நியாயம்பெற தென் மண்டலப் பொருளாதாரக் குழு வேண்டும்'

முறையிடு கேட்ட டெல்லி மந்திரி 'புறக்கணிப்பு வெறும் தோற்றம்' என்கிறார்

சென்னை, டிச. 2—

"தென்னாடு தொழில் துறையில் மிகவும் பின்தங்கிக் கிடக்கிறது; அபிவிருத்தித் திட்டங்களிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது" என்று ஆந்திர வர்த்தகக் கழகம், மத்திய வர்த்தக மந்திரி நித்தியானந்த கனுங்கோவிற்குச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

வர்த்தகக் கழகத்தின் 29-வது ஆண்டுவிழாவில் கலந்துகொண்ட அந்த மந்திரி, இந்தப் புகாருக்குப் பதிலளிக்கையில், அப்படிப் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதே தவிர, வேறொன்றுமில்லை' என்று மாய்மாலம் பேசினாராம்!

கழகத்தின் தலைவரான வேணுகோபால் தலைமையுரை ஆற்றுகையில், தென்மண்டலக் குழுவின் கீழ், ஒரு மண்டலப் பொருளாதாரக் கவுன்சில் அமைக்கப்பட வேண்டும் என்றும், இதன் மூலம், தென்மண்டலத்தின் நியாயமான கோரிக்கைகளை மத்திய சர்க்காருக்கு எடுத்துரைத்து மண்டலம் முழுவதும் இணையாக வளர்ச்சியுறுவதற்கு வழிசெய்ய வேண்டும் என்றும் கூறினர்.

'தொழில் வளர்ச்சி வேண்டுமென, தென் மண்டலம் இன்று கூக்குரலிட்டுக்கொண்டிருக்கிறது; இந்த மண்டலத்திலிருக்கும் வளங்களைக் கணக்கிலெடுத்துப் பார்த்தால், இங்கு ஏராளமான தொழில்கள் துவங்க வாய்ப்புகள் உண்டு என்பது தெரியவரும்.

"எனவே, இங்கு தொழில் வளம் பெருக, மண்டலக் குழுவின்கீழ் ஒரு பொருளாதாரக் குழு அமைக்கப்பட வேண்டுவது அவசியமாகும்.

"மாநிலத்தின் தொழில் அபிவிருத்தி பற்றி கவனிக்க சென்னை சர்க்கார் ஒரு குழு நியமித்துள்ளனர்; இதேபோல ஆந்திர சர்க்காரும் செய்கிறது.

"தென் மண்டலத்தில் உள்ள மாநிலங்கள் இவ்வாறு தயாரிக்கும் திட்டங்களை மத்திய சர்க்கார் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும்; ஏனெனில், தென் மண்டலம் ஏற்கனவே தொழிலபிவிருத்தியில் பின் தங்கியிருக்கிறது.

"திட்டத்தை வெட்ட நடவடிக்கை எடுக்கும்போது,

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தித் திணிப்புக் குழு அறிக்கை பரிசீலனை

பகிரங்கமாக நடத்த மறுப்பு

இந்திவெறியர் போக்கு மேலும் தெளிவாகிறது

புதுடில்லி, நவ. 30—

இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பரிசீலிக்க நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் நடவடிக்கைகள் இரகசியமாகவே நடைபெற வேண்டுமென, விதிமுறை உபகுழு, சிபாரிசு செய்ய முடிவு செய்துவிட்டதாம்!

உபகுழுவில் இடம் பெற்றுள்ள பிராங்க் அந்தோணி என்ற உறுப்பினர், 'குழுவின் நடவடிக்கைகள் பகிரங்கமாக நடைபெற வேண்டும்; பாராளுமன்ற உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் அனுமதிக்கப்பட வேண்டும்; குழு, சர்க்கார் அல்லது தனிப்பட்டவர்கள் ஏதாவது கருத்தறிவிக்க விரும்பினால் அந்தக் கருத்தினை அறிய முற்படவேண்டும்' என்று கூறிய யோசனைகள் அனைத்தையும் உபகுழுவில் பெருவாரியாக உள்ள காங்கிரசார் நிராகரித்துவிட்டனராம்!

குழுவின் நடவடிக்கைகள் பற்றி சொல்லுக்குச் சொல் சரியான ரிகார்டு இருக்க வேண்டும் என்று முடிவு செய்த உபகுழு, இந்த 'ரிகார்டி'ன் நகல் எல்லா உறுப்பினர்களுக்கும் தரப்படவேண்டும் என்ற அந்தோணியின் யோசனையையும் நிராகரித்தனராம்!

பாராளுமன்றத்திற்கூட இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டியதில்லை என்றும் முடிவாகிவிட்டதாம்!

இன்று கூட்டத்திற்கு பண்டிட் தக்கர்தாஸ் பர்காவா என்பார் தலைமை தாங்கினாராம்.

பு. எஸ். மல்லையா, டாக்டர் ரகுவீரா, பிராங்க் அந்தோணி ஆகியோர் மட்டுமே வந்திருக்கின்றனர்.

நங்கவரம் உழவர்களுக்கு மேலும் ஒரு வெற்றி!

'முச்சலிக்கா'காரர், சாகுபடி குத்தகைக்காரர்களே!

வார நிர்ணய நீதிமன்றத் தீர்ப்பு!

குளித்தலைத் தாலுகா நங்கவரம் பகுதியில் திரு. இராமநாத அய்யர் பண்ணையிலுள்ள குறிச்சியில் சுமார் 100 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு சாகுபடி செய்து வந்த 40 விவசாயிகள் நியாய வாரம் நிர்ணயம் செய்வதற்காக அவர்கள் எழுதிக் கொடுத்திருப்பது குத்தகை அல்லவென்றும், முச்சலிக்கா சீட்டு என்றும் கூறி நிலப் பிரபுக்கள் சார்பில், வழக்கு நடத்தி வந்தார்கள்.

30—11—57 சனிக்கிழமை அன்று மேற்கண்ட வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி 40 விவசாயிகளும் சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள்தான் என்று கூறப்பட்டுவிட்டது.

இந்தத் தீர்ப்பு கண்டு உழவர் பெருமக்கள் பெரிதும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்.

இதுபோல் வேறு சில பண்ணைகளில் நடைபெறும் வழக்குகளில் இன்னும் தீர்ப்பு கூறப்படவில்லை. வழக்கினை, குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தினர் ஊக்கத்துடன் கவனித்து நடத்தினர்.

தீர்ப்பு கூறப்படும் நாளில் 'ரென்ட் கோர்ட்டு'க்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் மு. கருணாநிதி அவர்களும், குளித்தலை-முத்துகிருஷ்ணன், கவுண்டம்பட்டி-முத்து, திராவிடப்பண்ணை முத்துகிருஷ்ணன் ஆகியோரும் சென்று வெற்றி பெற்ற விவசாயப் பெருமக்களோடு அளவளாவினர்.

முச்சலிக்கா கொடுமையால் படும் துன்பம் பற்றி சட்டமன்றத்தில் தி. மு. கழகம் விளக்கியதும், இப்போது விவசாயிகள் பெற்ற வெற்றியும் அவர்களுக்குப் புதிய எழுச்சியைத் தந்திருக்கிறது.

விவசாயிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் எம். வி. பார்த்தசாரதி, இராமபத்திரன் ஆகியோர் வாதிட்டனர். (ந. நி.)

இதோ ஒரு 'நாத்தீகர்'!

'சகுனம் பார்ப்பது முட்டாள்தனமானது' என்கிறார் நேரு

கான்பூர், நவ. 30—

"நல்ல சகுனம் வேண்டுமென்பதற்காக நாள், நட்சத்திரம் பார்ப்பது முட்டாள்தனமானது"

என்று, பண்டித நேரு, கூட்டம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

"நவீன விஞ்ஞான காலத்தில் புதிய சந்திரன்களும், நட்சத்திரங்களும் வானவீதியில் 'உலா'வரும்போது, நீங்கள் கணக்குப்போடுவது சரியாக இருக்க முடியாது. வானம் பார்ப்பதால் ஒரு நாடு முன்னேறாது; கஷ்டமாக உழைத்துத்தான் ஒரு நாடு முன்னேற முடியும்"

என்றும், பண்டித நேரு, கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் செயற்கைச் சந்திரன்

புதனன்று வானவெளியில் அனுப்பப்படுமாம்

நியூயார்க், டிச. 1—

நான்கு இராத்தல் எடையுள்ள முதலாவது சிறிய செயற்கைச் சந்திரனை அமெரிக்கா புதன்கிழமையன்று வானவெளியில் பறக்கவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் இரண்டு ரேடியோ டிரான்ஸ் மீட்டர்கள் வைக்கப்பட்டுள்ளதாம்.

இது, 72 அடி உயரமுள்ள—22,000 இராத்தல் எடையுள்ள 'வான்கார்ட்' ராக்கெட் மூலம் வான வெளியில் அனுப்பப்படுமாம்!

ஆந்திர மாநிலத்தில் சுத்திகரிப்புத் தொழிற்சாலை

ரூ. 15 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளதாம்

விசாகை, டிச. 1—

ரூ. 15 கோடி செலவில் கால்டெக்ஸ் நிறுவனம் விசாகப்பட்டணத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்தியுள்ளது.

515 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த ஆலை 1955-ல் ஆரம்பிக்கப்பட்டது.

மத்தியக் கிழக்கிலிருந்து கொண்டுவரப்படும் கலப்பு எண்ணெயிலிருந்து எரி எண்ணெய், பெட்ரோல், டீசல் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

100 மைல் நீளக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளனவாம். விசாகைத் துறைமுகமும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாம்.

துவரை உமி ஏற்றுமதி

பம்பாய், டிச. 1—

சென்னை மாநிலத்திலுள்ள எல்லாத் துறைமுகங்களிலிருந்தும் சிறு அளவு துவரை உமி ஏற்றுமதியை அனுமதிப்பதென இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—12—57 ஞாயிறு அன்று நாகர்கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை
2—12—57

தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—12—57 திங்கள்

எதிர்பார்க்கக்கூடிய 'இனிய கானம்'

உருக்குத் தொழில்தான் ஏனைய கனரகத் தொழில்களுக்கெல்லாம் தாய்த் தொழில் ஆகும். அதாவது, கனரகத் தொழில்கள் அனைத்தும் உருக்கு இரும்பையே நூற்றுக்கு நூறும் அடிப்படையாகக்கொண்டு செயல்படக்கூடியதாகும்.

இரும்புத் தொழில் இடம் பெறாத நாட்டில் எந்த ஒரு சிறிய கனரகத் தொழிலையும் துவக்கமுடியாது. இரும்புத் தொழில் இடம்பெறாத நாட்டில், சாதாரண கனரகத் தொழிலைத் துவங்குவதானாலும், அதற்குத் தேவைப்படும் உருக்கை வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்தாகவேண்டும்.

பிறநாடுகளிலிருந்து உருக்கை இறக்குமதி செய்து கனரகத் தொழில்களைத் துவங்கமுடியாது; அப்படித் துவங்கப்பட்டாலும் அது போதுமான அளவில் இலாபகரமானதாக இருக்க முடியாது என்பதும் பொது விதியாகும். இந்தப் பொது விதிக்குக் கட்டுப்படாது விதவிதமான கனரகத் தொழில்களை நிர்மாணித்து, உருக்குத் தொழிலுக்கான மூலப்பொருட்களை நிரம்பக் கொண்டுள்ள நாடுகளின் கனரகத் தொழில்களுடன் வெற்றிகரமாகப் போட்டியிட்டுவரும் நாடும் உலகில் உண்டு. அது ஒரு பொருளாதாரப் புதிர்.

அப்பொருளாதாரப் புதிரை—செயற்கரிய செயலைச் செய்துவரும் நாட்டின் நிலப்பரப்பு பெரிதாகவுமில்லை. அந்த நாட்டில் கூடிய மக்கள் தொகையுமில்லை. இருந்தாலும், உருக்குத் தொழிலிலும், கனரகத் தொழிலிலும் அந்தச் சிறிய நாடு சாதித்துவரும் சாதனை அற்புதமானது.

சேலம் மாவட்டத்தில் மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கும் இரும்புக் கனிப்பொருளை வெட்டி எடுத்துப் பண்படுத்த உருக்குத் தொழிற்சாலை ஒன்று வேண்டும் எனத் தமிழ் மக்கள் ஒருமிக்கக் கேட்டுவருவது, வேலையின்றி வாட்டத்திலும் வறுமையிலும் வாடிக்கிடக்கும் சில தமிழ்மக்களுக்குப் பணி புரியும் வாய்ப்பு கிடைக்கக்கூடுமே என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமல்ல; சேலத்தில் உருக்குத் தொழில் காலப்போக்கில் வளர்ச்சி பெறுமானால், அதை அடிப்படையாகக்கொண்டு தென்னகத்தில் — தமிழகத்தில் வேறு பல கனரகத் தொழில்கள் • நிர்மாணிக்கப்படுவதற்கு அரியதோர் வாய்ப்பு கிட்டுமோ என்ற பெரும் விருப்பால்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

சேலத்தில் உருக்குத்தொழிற்சாலை ஒன்று வேண்டும் எனக் கோரும் தமிழ் மக்கள், அது கிடைத்தவுடன் என்ன கோருவார்கள் என்ற உண்மையை, உருக்குத் தொழிற்சாலை தேவை எனக் கோருகின்ற அனைவரும் உணர்ந்திருக்கின்றனர் எனச் சொல்ல முடியாது. அப்படி உணர்ந்திருப்பதற்குத் தேவையுமில்லை.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கத் தீர்மானித்துவிட்டால், அதன்பிறகு தமிழ் மக்களிடமிருந்து கிளம்பக்கூடிய கோரிக்கை எதுவாக இருக்கும் என்பதை, கோரிவரும் தமிழ் மக்களில் சிலராவது உணர்ந்திருந்தாலும் உணராதிருந்தாலும், டெல்லி 'நம்மவர்' ஆட்சியைத் தங்கள் கைப்பாவையாகக் கொண்டிருக்கின்ற உத்தரப் பிரதேசத் தலைவர்கள் மிகமிகத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றனர். அப்படித்தெரிந்திருக்கின்ற காரணத்தினால்தான், எதிர்காலத்தில் தமிழ் மக்களால் கிளப்பப்படக்கூடும் என்ற கோரிக்கைகளுக்கெல்லாம் முதல் கோரிக்கையாக — மூல கோரிக்கையாக உள்ள சேலம் உருக்குத் தொழிற்சாலை கோரிக்கையை, தட்டிக் கழிப்பதில் டெல்லியில் கோலோச்சிவரும் உத்தரப் பிரதேசத் தலைவர்கள், பிடிவாதமாக இருந்துவருகின்றனர். உருக்குத் தொழிற்சாலை கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதற்கு, பொருத்தமற்ற எதைஎதையோ காரணங்களாகக் காட்டி வருகின்றனர்.

திட்டமிட்ட இந்தச் சதியை டெல்லி செய்துவருகிறது.

உருக்குத் தொழிலை அடிப்படையாகக் கொண்டுதான், எந்த ஒரு கனரகத் தொழிலையும் துவங்கமுடியும் என்ற உண்மையை நாம் மேலே குறிப்பிட்டிருக்கின்றோம். தென்னகத்தில் குறிப்பிடத்தகுந்தவகையில் உருக்குத் தொழில் இடம் பெற்றில்லாத காரணத்தினால், தென்னகத்தில் — தமிழகத்தில் சிறிய கனரகத் தொழிலைக்கூடத் துவங்கமுடியாது போகக்கூடும் என்ற உண்மையையும் சுட்டிக் காட்டி இருக்கின்றோம்.

அதை மெய்ப்பிக்க இதோ ஒரு எடுத்துக்காட்டு.

இரண்டாவது கப்பல் கட்டும் தொழிற்சாலையை எங்கு துவங்குவது என்பதை ஆராய இங்கிலாந்திலிருந்து ஒரு நிபுணர் குழு தென்னகத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறது. அது மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள கொச்சியையும் கூடத்தான் பார்வையிட்டிருக்கின்றது.

தொழிற்சாலை துவங்குவதற்குரிய இயற்கைவளம் தென்னகத்தில் இருந்தாலும்கூட, உருக்குத் தொழிற்சாலைகள் இடம் பெற்றிருக்கும் பகுதிகளுக்கு அருகில் கப்பற்கட்டும கனரகத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதுதான் இலாபகரமானதாகும் என்று அந்த இங்கிலாந்து நிபுணர் குழு கருத்தறிவித்திருக்கிறதாம்.

இந்த நிபுணர் குழுவின் கருத்துப்படி, இரண்டாவது கப்பற்கட்டும் தொழிற்சாலையை நிர்மாணிப்பதானால், பம்பாயை அடுத்துள்ள காண்டலா துறைமுகத்தில் அமைக்கவேண்டும் அல்லது கல்கத்தா கடற்கரையோரப் பகுதியில் அமைக்கப் படவேண்டும்.

நிபுணர்கள்மீது பழியைப் போட்டு, டெல்லி 'நம்மவர்' ஆட்சி இரண்டாவது கப்பற்கட்டும் தொழிற்சாலையை மேற்குறித்துள்ள ஏதாவது ஒரு பகுதியில் நிர்மாணிக்க முனைந்தால் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. வடநாட்டுப் பகுதியைத் தொழில் வளமாக்க வேண்டும் என்ற தங்கள் உள்ளக்கிடக்கையை, நிபுணர்கள் மீது ஏற்றிவைத்து, உத்தரப் பிரதேசத் தலைவர்கள் நிறைவேற்றிக்கொள்ளுவதும், அவர்களின் முன்செயலில் இருந்து தீர்மானிக்கக் கூடியதுமாகும்.

'தென்னகத்தில் உருக்குத் தொழிற்சாலை இல்லை—எனவே, இப்பகுதியில் இரண்டாவது கப்பற்கட்டும் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்குமில்லை' என டெல்லி 'நம்மவர்' ஆட்சி பல்லவிபாடத்தொடங்கும். அதைத் தொடர்ந்து சென்னையில் கோலோச்சும் காங்கிரசுப் பதுமைகளும் பின்பாட்டு பாடும். அதைக் கேட்டு 'இனிய கானம்' எனத் தமிழ் மக்கள் இறும்பூதெய்த வேண்டியதுதான்!

மூன்றாண்டு பட்டப் படிப்பு

மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் தாக்கீது

புதுடில்லி, நவ. 29—

"பல்கலைக் கழகங்கள் மூன்று ஆண்டு பட்டப் படிப்பை அமுலாக்குவதை சாத்தியமாகும்படி செய்ய, மாநில சர்க்கார்கள் தற்போதுள்ள திட்ட நிதி ஏற்பாடுகளை சமயோசித முறையில் சரிக்கட்டி, மத்திய சர்க்காரின் மானியத்திற்குத் தகுந்தபடி நடைமுறையில் தங்கள் பங்கு மானியத்தைத் தரமுடியுமா என்று பார்ப்பதற்காக வரவு-செலவுத் திட்ட நிலைமையைப் பரிசீலனை செய்யுமாறு மாநில சர்க்கார்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்" என்று மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உணவு நெருக்கடியின் எதிரொலி!

மாநில சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றத் தீவிரம்

நிதி வசதியும் தரப்படுமாம்

புதுடில்லி, நவ. 30—

உணவு உற்பத்தியில் அதிக அக்கறை எடுத்துகொள்ள மத்திய அரசாங்கம் முனைந்துள்ளது. மாநிலங்களில் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் அதிகக் கவனம் செலுத்த முன்வந்துள்ளது.

தென் மாநிலங்களுக்கு மத்திய துணை உணவு மந்திரி கிருஷ்ணப்பா சுற்றுப் பயணம் செய்து சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வற்புறுத்துவார் என்று தெரியவருகிறது.

சிறு பாசனத் திட்டங்களுக்கான அதிக நிதி வசதியும் மாநிலங்களுக்குத் தரப்படுமாம்.

பாராளுமன்றத்தில் உணவு அமைச்சர் ஜெயின் இதனைத் தெரிவித்துள்ளார்.

உரிமைகளைப் பறிக்கும் உத்தரவுக்குக் கண்டனம்

புதுடில்லி, நவ. 30—

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களில் மட்டுமே அரசாங்க ஊழியர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

'இந்த உத்தரவு, சங்கம் அமைப்பதற்கு அரசியல் சட்டம் தரும் உரிமைகளைப் பறித்துவிடுகிறது' என்றும், 'தொழிற்சங்கத்தின் உரிமைகளைப் பறிப்பதாகும்' என்றும் எழு பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்துள்ள ஒரு கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியத் தலைநகரில் வள்ளுவர் தமிழ் மன்றம்

கட்சிவேறுபாடில்லாமல் எல்லோரும் கலந்துகொண்டனர்

துவக்கவிழாவில் ஈ.வெ.கி. சம்பத் யோசனைகள்

புதுடில்லி, நவ. 30—

இந்தியத் துணைக் கண்டத்தின் தலைநகரான டெல்லியில் 'வள்ளுவர் தமிழ் மன்றம்' என்ற பெயரில் ஒரு மன்றம் இயங்கத் துவங்கியுள்ளது.

தமிழ்நாட்டு மக்கள்சபை உறுப்பினர்கள் கட்சி வேற்றுமைகளை மறந்து மன்றத்தின் துவக்க விழாவில் கலந்துகொண்டுள்ளனர்.

விழாவிற்கு பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் திருமதி நல்லமுத்து-இராமமூர்த்தி தலைமை வகித்தார்,

கோவைத் தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. எஸ். இராமசாமி அவர்கள், மன்றத்தைத் துவக்கி வைத்தார்.

தமிழ் நாட்டிலிருந்து, தலைநகரத்திற்குக் குடியேறிய மக்களுக்குத் தமிழிலும், ஆங்கிலத்திலும் இலக்கிய வகுப்புகள் நடத்த மன்றம் திட்டம் வகுத்துள்ளது என்று தெரியவருகிறது.

தற்போது டெல்லியில் 10,000 தமிழர்கள் உள்ளனராம். அவர்களில் பெரும்பாலோர் நெசவு வேலையில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் என்றும், கைத்திறன் பெற்றவர்கள் என்றும், தாயகத்தில் வேலை கிடைக்காத காரணத்தினால் குடிபெயர்ந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் டெல்லியில் ஏவலர்களாகவும், தனிநபர் வீடுகளில் வேலை செய்தும் பிழைக்கின்றனர் என்று தெரியவருகிறது.

தலைமை உரையில் திருமதி நல்லமுத்து-இராமமூர்த்தி, மன்றத்தினர் பெண் கல்வியைப் பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர்.

மன்றத்தைத் துவக்கிவைத்து, திரு. கே. எஸ். இராமசாமி பேசுகையில், தலைநகரில் அனைவருக்கும் உதவியளிக்கும் நிலைக்கு மன்றம் வளர்ச்சி பெற வேண்டுமென்றும், சாதி வேற்றுமைகளை அகற்றி ஒற்றுமையைப் பேணி வளர்ப்பதற்கு மன்றம் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்து நமது கழகப் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் பேசுகையில், வள்ளுவர் தமிழ் மன்றம் டெல்லியில் ஓர் சிறந்த கலாச்சார நிறுவனமாக உருவாக வேண்டும் என்று வற்புறுத்தி, தமிழர் எதிர்காலம் பற்றி நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்தார்.

அகில இந்திய அஞ்சல் தொலைவரி ஊழியர் சங்கப் பொதுச்செயலாளர் ஏ. எஸ். இராசன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் நாராயணசாமி செட்டியார், சம்பந்தம், ஆர். எஸ். ஆறுமுகம், டி. கணபதி, இளையபெருமாள், சனநாயகக் காங்கிரஸ் மக்கள்சபை உறுப்பினர் சண்முக கௌண்டர், தி. மு. கழக மக்கள் சபை உறுப்பினர் தர்மலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

17 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

மன்றத்தின் சட்ட திட்டங்கள், நிர்வாகிகள் பற்றி அந்தக் குழு ஆராய்ந்து ஆவன செய்யும்.

டெல்லியில் உள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கையை முதலில் மன்றம் கணக்கிட்டு, அவர்களின் தேவைகளை ஆராய்ந்து ஆவன செய்யும் என்று தெரியவருகிறது.

சமூக நெருக்கடிகள் பற்றி ஆராய்ச்சி

செலவிடப்பட்ட தொகை பற்றி தகவல்

புதுடில்லி, நவ. 30—

"இந்தியாவில் சமூக நெருக்கடிகள் ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றி நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் பலன்கள் இன்னும் மதிப்பீடு செய்யபட்டு, வகைப்படுத்தப்படவில்லை; சில பல்கலைக் கழகங்களில் இன்னும் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம்" என்று மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாராய்ச்சி இன்னும் நடந்துகொண்டிருக்கிறதென்றும் இந்தத் திட்ட வேலைகள் சம்பந்தமாக இதுவரை ரூ. 1,93,759 செலவாகியிருக்கிறதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடலூரில் தொழிற்சாலை

சென்னை சர்க்கார் முடிவு

கொள்ளிடம், நவ. 30—

சென்னை அரசாங்கம், வடலூரில், ரூ. 50,000 செலவிட்டு அம்பர் சர்க்காவிற்கான கருவிகளைத் தயார் செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளதாம்.

பன்னு வைரச் சுரங்கம் தேசீயமயமாகும்

'சீக்கிரமே சட்டம் வரும்' என்கிறார் மந்திரி

புதுடில்லி, நவ. 29—

பன்னு வைரச் சுரங்கத் தொழிலை தேசீய மயமாக்குவதற்கான சட்டம் சீக்கிரமே கொண்டு வரப்படும்.

இந்தத் தகவலை, மக்கள்சபையில் தந்த சுரங்க இலாகா மந்திரி மாளவியா, இந்தச் சுரங்கத்தை நிர்வகிப்பதற்காக, சர்க்கார் நடத்தும் கம்பெனி ஒன்றோ, கிரந்தா கார்ப்பரேஷன் ஒன்றோ நிறுவப் பட வேண்டியிருக்கும் என்றும் கூறியுள்ளார்.

வெளிப்படையாகக்கூறத் துவங்கிவிட்டார் நேரு!

கான்பூர், நவ. 30—

'இரண்டாவது திட்டத்தை குறைக்கவும் முடியாது—காலத்தை நீடிக்கவும் முடியாது' என்று, பண்டித நேரு பேசி வந்தாரல்லவா?

இன்று அதே பண்டிதர், 'திட்டத்தின் இலட்சிய அளவை எய்துவதற்கு அதிகக் காலம் தேவைப்படலாம்' என்று வெளிப்படையாகக் கூறத் துவங்கிவிட்டார்.

வரதட்சணை பரம்பரை வழக்கமாம்!

மக்கள் சபையில் மந்திரி பதில்

புதுடில்லி, நவ. 29—

வரதட்சணை தருவது என்பது பரம்பரையாகத் தரப்படும் பரிசாம்! எனவே, 'வரதட்சணை வாங்குவதற்கு சர்க்கார் ஊழியர்கள் முன் அனுமதி பெற வேண்டியதில்லை' என்று, மக்கள்சபையில் உள்நாட்டு மந்திரி தத்தார் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், தாங்கள் வாங்குகிற வரதட்சணைபற்றி—அதுரொக்கமோ பொருளோ—சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று மட்டும் கேட்கப்பட்டிருக்கின்றனராம்!

இறக்குமதிக் கட்டுப்பாடு

உள்நாட்டுச் சரக்குகளின் தரத்தைப் பாதிக்காதாம்!

புதுடில்லி, நவ. 29—

"உபயோகச் சரக்குகளில் அநேக இனங்களின் இறக்குமதி மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதனால், பொதுவாக உள்நாட்டுத் தயாரிப்புச் சரக்குகளின் விலைகளில் கணிசமான அதிகரிப்பு எதுவும் ஏற்படவில்லை" என்று, மத்திய தொழிலியல் மந்திரி மனுபாய்ஷா, மக்கள்சபையில் கூறியுள்ளார்.

உள்நாட்டு உபயோகப் பொருள்களின் 'தரம்' அதிகமாகக் குறைந்து விடுமென்று சர்க்கார் அஞ்சவில்லை எனவும், அவ்வாறு தரம் குறைந்துவிட்டிருப்பது பற்றிய தகவல் எதுவும் இதுவரையில் சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

விலைகள் உயர்ந்தால் உடனே சாத்தியமான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் விலைவாசிப் போக்கை சர்க்கார் பரிசீலனை செய்து வருகின்றனர் என்றும், உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்காகவும், உற்பத்தியைப் பெருக்குவதற்காகவுமே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் கூறினார்.

பிராவிடண்ட் நிதி வசதி

நடவடிக்கை பற்றி தகவல்

புதுடில்லி, நவ. 30—

ஊழியர் பிராவிடண்ட் நிதிச் சட்டம் 1956 டிசம்பர் மாதம் பார்லிமெண்டால் திருத்தப்பட்டபின், 1957, செப்டம்பர் 30-ந் தேதிவரை 4,94,000 தொழிலாளர்கள், அச்சட்டத்தின்படி நன்மை அடைந்து வருகிறார்களாம்!

"இந்தச் சட்டம் அமுலாகும் 292 தொழிற்சாலைகள், இச்சட்ட நிபந்தனைப்படி எந்த அதிகாரிகளிடம் தங்கள் பிராவிடண்ட் நிதித் தொகையை ஒப்படைக்க வேண்டுமோ அவர்களிடம் ஒப்படைக்கவில்லை; அதை வசூலிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன; அவசியமான விஷயங்களில் வழக்கும் தொடரப்பட்டிருக்கிறது" என்று மக்கள் சபையில் துணை அமைச்சர் அபித்அலி தெரிவித்துள்ளார்.

நாட்டுச் செக்கில் ஆட்டும் எண்ணெய்க்கு வரி விலக்கு

மிருகங்களால் இழுக்கப்படும் செக்குகளில் உற்பத்தி செய்யப்பட்ட தாவர எண்ணெய்களுக்கு, எந்தவித வரி விதிப்பும், சுங்கக் கட்டுப்பாடும் இன்றி முழு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள்சபையில் தெரிவித்தார்.

மின்சாரத்தால் இயக்கப்படும் செக்குகள் சம்பந்தமாகவும்கூட, ஆண்டிற்கு 75 டன் வரையில் தயாராகிற எண்ணெய்களுக்கும் இதேபோல் முழு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதாம்!

பழைய குற்ற பரம்பரையினர்

வாழ்க்கை நலம்

அரசாங்க உதவிபற்றி அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 26—

பல்வேறு மாநிலங்களிலும், மத்திய நிர்வாகப் பகுதிகளிலும் பழைய குற்ற பரம்பரையினரின் வாழ்க்கை நலத்துக்கான பல்வேறு திட்டங்களுக்காக 1956-58 கால அளவில் ரூ. 91 இலட்சத்திற்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

மத்திய திட்டங்களுக்காகும் செலவுப் பொறுப்பு முழுவதும் இந்திய சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது; மாநில சர்க்கார் திட்டங்களுக்காகும் செலவுப் பொறுப்பு மத்திய சர்க்காராலும், மாநில சர்க்கார்களாலும் சரி சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படுமென மக்கள்சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தாம்பரம்--விழுப்புரம்

மின்சார இரயில் பாதை

செலாவணிக் கஷ்டமில்லாவிடின் நிறைவேறிவிடுமாம்

புதுடில்லி, நவ. 28—

தாம்பரம்-விழுப்புரம் இடையே மின்சார இரயில் பாதை அமைப்பதற்கான எஞ்சினீயரிங் வேலைகள் ஏற்கனவே துவங்கிவிட்டதாக மக்கள்சபையில் இரயில்வே மந்திரி செகஜீவன்ராம் அறிவித்திருக்கிறார்.

ஆனால், இதுபோன்ற மின்சார இரயில் பாதை அமைப்பதற்கென இரண்டாம் திட்டத்தில் ரூ. 80 கோடிவரை ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அன்னியச் செலாவணிக் கஷ்டம் இல்லாமலிருந்தால், இந்தத் திட்டங்கள் நிறைவேறிவிடும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சேலம்--பெங்களூர் இரயில் பாதை!

புதுடில்லி, நவ. 26—

சேலத்திற்கும்---பெங்களூருக்குமிடையே இரயில் பாதை அமைப்பது பற்றி இப்போது பூர்வாங்க 'சர்வே' நடைபெறுவதாகவும், எஞ்சினீயரிங் 'சர்வே' நடத்த ரூ. 4.75 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'சர்வே' அறிக்கை கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படுவதற்குக் காரணம், 'மீட்டர்கேஜ்', 'பிராட்கேஜ்' ஆக இரண்டிற்குமாக 'சர்வே' நடைபெறுவதுதான் என்றும் உதவி இரயில்வே மந்திரி ஷா நவாஸ்கான் தெரிவித்திருக்கிறார்.

மீட்புப் பிற்கால நிலையங்கள்

28 விடுதிகள் ஏற்படுத்தப்படும்

புதுடில்லி, நவ. 30—

"மீட்புப் நிலையங்களை ஏற்படுத்துவதற்கான திட்டம் 12 மாநிலங்களில் இறுதியாகத் தயாராகிவிட்டது; என்றும், இத்திட்டத்தின்படி மொத்தம் 28 விடுதிகளை ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது" என்றும், அனுமதிக்கப்பட்ட இந்த விடுதிகளுக்காக இரண்டாவது திட்டகாலத்தில் ரூ. 84,10,274 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதென்றும் மக்கள்சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

நிறுத்திவிடவில்லையாம்!

புதுடில்லி, நவ. 30—

"குமாஸ்தா வேலைக்காகப் பெயர்களைப் பதிவு செய்வதை வேலை தேடித்தரும் காரியாலயங்கள் முழுமையிலும் நிறுத்திவிடவில்லை" என்று, மக்கள்சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புற்று நோயும், புகையிலையும்!

அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, நவ. 28—

'பீடி, சிகரெட் பிடிப்பவர்களுக்கும், புகையிலை, பொடியைப் பயன்படுத்துபவர்களுக்கும் புற்றுநோய் அதிகமாக ஏற்படுகிறது"

என்று மக்கள் சபையில் மத்திய அமைச்சர் கார்மார்கர் தெரிவித்துள்ளார்.

க்ஷயரோக நிவாரணம்

செலவிடப்பட்ட தொகை பற்றி மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 30—

முதலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் க்ஷயரோக நிவாரண வேலை சம்பந்தமாக இந்திய சர்க்கார் மொத்தம் ரூ. 1,89,49,951 செலவிட்டுள்ளனர் என்று, சுகாதார மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்

'சல்பா' மருந்துகள் இறக்குமதி

இந்தியாவின் நிலைஎன்ன?

புதுடில்லி, நவ. 30—

முதலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ரூ. 4,33,86,809 மதிப்புள்ள 'சல்பா' மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'சல்பா' மருந்துகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ 17,89,560 என்றும், மத்திய சுகாதார மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

ஏற்றுக்கொண்டனர்!

புதுடில்லி, நவ. 28—

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளில் நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியவற்றை ஆதரிக்கும் தீர்மானம் மக்கள் சபையில் நிறைவேறியுள்ளது.

தயாராகுமாறு உத்தரவு!

எந்நேரத்திலும் எந்த நிலைமையையும் சமாளிப்பதற்குத் தயாராக இருக்குமாறு சோவியத் பாதுகாப்பு அமைச்சர் ரஷ்யப் படைகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சேலம் குதிரை வண்டித் தொழிலாளர்கள்

குறைகளைக் களையுமாறு தோழர்கள் வற்புறுத்தல்

26—11—57 மாலை போஸ் மைதானத்தில் சேலம் நகர குதிரை வண்டித் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பொதுக்கூட்டம் வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. சுமார் 50 குதிரை வண்டிகள் ஊர்வலமாகக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்துசேர்ந்தன.

கூட்டுறவு முறையில் குதிரை வண்டித் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய நன்மைகளைப் பெறுவதன் அவசியத்தைப்பற்றி தோழர் வி. சிவப்பிரகாசம் பேசினார்.

தோழர் சிற்றுளி எ. சுப்பிரமணியம் பேசுகையில் குதிரை வண்டித் தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும், குதிரை வண்டிகளுக்குப் போதுமான அளவு குதிரை வண்டி நிலையங்களை நகராண்மைக் கழகம் கட்டித்தர வேண்டியதையும் வலியுறுத்தினார்.

குதிரை வண்டித் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக இருந்து தங்கள் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டியதைப்பற்றித் தோழர் கே. எஸ். ரங்கசாமி பேசினார். குதிரை வண்டித் தொழிலாளர்களின் குறைகளை விவரித்தும் அவற்றைப் போக்க வேண்டியதைப்பற்றியும் தோழர் ஜெ. பீர் முகமது பேசினார். (ந. கி.)

எட்டயபுரத்தில்

நெசவாளர் வேலை நிறுத்தம்

கைத்தறித் துணி விற்பனைக் கழிவு குறைப்புக்கு எதிர்ப்பு

24—11—57 அன்று எட்டயபுரத்திலுள்ள 1,200 தறிகளும் வேலை செய்யவில்லை; நெசவுக்குத் தேவைப்படும் உபதொழில்களும் நடைபெறவில்லை. முழு அர்த்தால் நடைபெற்றது.

மாலையில் நடந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான நெசவாளர்களும், சாயத் தொழிலாளர்களும், ஏனையோரும் கலந்துகொண்டு 'கைத்தறி விற்பனைக் கழிவைக் குறைக்காதே; நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடு' என்று முழக்கமிட்டு முக்கிய வீதிகள் வழியாக வந்தனர்.

இரவு 7 மணிக்கு பட்டத்து விநாயகர் கோவில்முன், தோழர் சு. அருணகிரி தலைமையில் நடந்த நெசவாளர் சங்கக் கூட்டத்தில், தோழர்கள் அ. இராமசாமி, ஆர். கே. சாமி, மா. ஆத்தியப்பன் மே. அழகர்சாமி ஆகியோர் பேசியபின் நெசவாளர் சங்கச் செயலாளர் எஸ். கலிங்கன் நெசவாளர் குறைகளை எடுத்துக்கூறி, கைத்தறித் துணி விற்பனைக் கழிவை (ரிபேட்) குறைக்கக் கூடாது என்பதை வற்புறுத்திப் பேசினார்.

காட்டுப்பாடியில்

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி

கலெக்டரிடம் வற்புறுத்தல்

17—11—57 காலை 10மணிக்கு காட்டுப்பாடி ராபர்ட்சன்பேட்டையில், காட்டுப்பாடி பிர்க்கா தாழ்த்தப்பட்டோர் முக்கியஸ்தர்கள் கூட்டம், திரு. கே. எம். முத்து தலைமையில் நடைபெற்றது.

காட்டுப்பாடி நகரில் உயர்நிலைப் பள்ளி இருந்தும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்கி படிக்க விடுதி இல்லாதகாரணத்தால், வெகு தொலைவிலுள்ள கிராமங்களில் வசிக்கும் மாணவர்கள் கல்வி பயில முடியாத காரணத்தால் உடனடியாக காட்பாடி நகரில், 'அம்பேத்கார் மாணவர் விடுதி' என்ற பெயரில் ஒரு விடுதியைத் துவக்கி நடத்தவேண்டும் என்று முடிவுசெய்து, இதைப் பொறுப்பேற்று நடத்த திரு. ஏ. டி. வேலாயுதம் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

18—11—57 காலை 7-30 மணிக்கு, தோழர்கள் ஏ. மகாதேவன், ஏ. டி. வேலாயுதம், என். பாலகிருஷ்ணன் ஆகியோர் மாவட்ட கலெக்டரைச் சந்தித்து மேற்படி விடுதிக்காக மனு கொடுத்தனர்; கலெக்டர், மனுவைச் சிபார்சு செய்து அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்தார்.

பிற்பட்ட வகுப்பினருக்கு சலுகை தருகின்றனர்!

சென்னை, நவ. 29—

அரசாங்கத்தின் தற்போதைய உத்தரவுப்படி, பிற்பட்ட வகுப்பு மாணவர் ஒருவர் கலைப் படிப்பில் இண்டர்மீடியட் பரீட்சை தேறியிருந்தாலும் அல்லது மாநிலத்தில் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருந்தாலும், சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு உட்பட்ட அல்லது மாறுன உத்தியோகத்துக்கு மனுச் செய்வதில் கட்டணம் செலுத்துவதினின்றும் விலக்கு உண்டு.

முகவரி மாற்றம்

"நான் திருச்சி நேஷனல் மோட்டார் சர்வீஸ் லிமிட்டெடிலிருந்து விலகிக்கொண்டுவிட்டபடியால் இனி எனக்குக் கடிதம் எழுதும் நண்பர்கள் 'டி. பி. அழகமுத்து, துறையூர், திருச்சி மாவட்டம்' என்ற முகவரிக்கு எழுத வேண்டுகின்றேன்" எனத் தோழர் டி. பி. அழகமுத்து அறிவிக்கிறார்.

ஆசிரியருக்குக் கடிதம் :

வேண்டுவது என்ன?

ஐயா,

சென்னை மாநிலக் கல்வித் திட்டத்தைப்பற்றி அரசாங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கை குறித்து மக்கள் அறிவார்கள். இவ்வறிக்கையின்மேல் சட்டமன்றத்தில் விவாதம் நடந்தது நினைவிருக்கலாம். வெள்ளை அறிக்கையில் மொழிக் கல்விபற்றி உள்ள விதிகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாகாணத்தில் உள்ள எல்லா மாணவர்களும் 3 மொழி கற்க வேண்டும் என்றும், அதில், .

1. தாய் மொழி
2. இந்தி அல்லது வேறு இந்திய மொழி
3. ஓர் ஐரோப்பிய மொழி

என்றும் ஏற்பாடு இருக்கிறது. இது இந்தியை மறைமுகமாகத் திணிக்கும் திட்டமே தவிர வேறு இல்லை. இந்தி என்று இருந்தால் படிக்க மாட்டார்கள் என்று, இரண்டாவது மொழி ஒன்றைத் திணிக்கிறார்கள். இது கடுமையாக எதிர்க்கப்படவேண்டிய விஷயம்.

ஒரு மனிதன் உலகத்தில் வாழ இரண்டு மொழிகள் போதும். ஒன்று—தாய்மொழி; இரண்டாவது—ஓர் உலக மொழி. இவ்விரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளைக் கற்க வற்புறுத்துவது அநீதியாகும். விரும்புபவர்கள் எத்தனை மொழி வேண்டுமானாலும் கற்கலாம்; வற்புறுத்தல் கூடாது. அதுவுமன்றி, வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மூன்று மொழிகளின் எழுத்துக்கள் வெவ்வேறானவை. இம்மூன்றிலும் பிள்ளைகளுக்குப் பயிற்சி ஏற்படுத்தல் அவ்வளவு எளிதல்ல. வெறும் மொழிகளையே கற்றுக்கொண்டிருந்தால் மற்றக் கலைகளைப் படிக்கமுடியாது. இந்தியா முழுவதற்கும் ஆங்கிலம் பொது மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் பல துன்பங்கள் நீங்கிவிடும். பிள்ளைகள் படிப்பும் சுலபமாக வளரும். எனவே, நமக்கு வேண்டுவது தமிழும், ஆங்கிலமும் மட்டுமே.

பகவதி ஜெயராமன்
சென்னை-1.

திருமணி கிராமத்தில் அண்ணா

திருவள்ளுவர் சிலைத் திறப்பும் பொதுக்கூட்டமும்

வடாற்காடு மாவட்டம் ஆரணி அடுத்த திருமணி கிராமத்தில் 23—11—57மாலை 6-30 மணிக்கு கிராமத்தின் முக்கிய வீதியின் நடுவே திருவள்ளுவர் உருவச் சிலையை அண்ணா அவர்கள் திறந்துவைத்தார்கள்.

பிறகு நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா கலந்துகொண்டார்;

தோழர்கள் களம்பூர் எஸ். எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., மா.கி.தசரதன், காஞ்சி-இராசகோபால், பூஞ்சோலை ஆகியோர் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கி, கிராம மக்களுக்குப் புரியும்படியான மேற்கோள்களுடன் அரிய சொற்பொழிவாற்றினர்.

அண்ணா அவர்களிடம் திருமணி தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் ஒரு மனு கொடுக்கப்பட்டது. அந்த மனுவில் கண்டுள்ள—குடியிருக்க நிலம் வேண்டும் என்ற—கோரிக்கையை சர்க்காருக்குத் தெரிவிப்பதாக அண்ணா உறுதி கூறினர்.

அண்ணா அவர்களுக்கும், மற்ற பேச்சாளர்களுக்கும், ஆரணி தி. மு. க., பொளமல்லூர் தி.மு.க., திருவத்திபுரம் தி.மு.க. ஆகியவை சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

திருமணி விவசாயிகள் சார்பில் அண்ணா அவர்களுக்கு நெல் கதிர் மாலை அணிவிக்கப்பட்டது.

கொழும்பு நகரசுத்தித் தொழிலாளர் வேலை நிறுத்தம்

அத்யாவசிய வேலைகளை கவனிக்க இராணுவம்

கொழும்பு, டிச. 1—

கொழும்பு நகரில் உணவு, தண்ணீர் விநியோகம், சுகாதார வேலைகள், நெருப்பணைத்தல் முதலியனவற்றை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு நகரசபையில் பணியாற்றும் சுமார் 7,500 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதினாலேயே கவர்னர்-ஜெனரல் குணதிலகே, உத்தரவு மூலம், இராணுவம் மற்றும் கப்பற்படையினரை நகரின் அத்தியாவசிய வேலைகளைக் கவனிக்க அனுப்பியிருக்கிறார்.

நகரசபைத் தொழிலாளர்கள், பிரதானமாக சம்பள உயர்வும், வசதிகள் உயர்வும் வேண்டுமெனக் கோரி வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

பிரதமர் பண்டார நாயகா ஊரிலில்லை; சி.பி.டி. சில்வா, தற்காலிகமாக மந்திரி சபையில் தலைவராக இருக்கிறார். அவரது ஆலோசனையின் பேரிலேயே கவர்னர்-ஜெனரல் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

அவர் பத்திரிகையாளரிடம் பேசுகையில், 'ஏற்கனவே கழிவு நீர்க்குழாய்கள் கிரம்பிவிட்டன; வேலைநிறுத்தம் நீடித்தால் குழாய்கள் வெடித்துப்போகும்; சர்க்காருக்குப் புதிய குழாய்கள் போடும் வகையில் ரூ. 4-கோடி செலவாகும்; இந்த நஷ்டத்தைவிட மக்களுக்குத் தோன்றக்கூடியகொடிய தொத்து நோய்களினால் ஏற்படும் நஷ்டம் மிகப் பெரியதாயிருக்கும்' என்று கூறியிருக்கிறார்.

இதற்கிடையில், சுமார் 9,000 பேர் கலந்துகொள்ளும் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் நீடித்துக்கொண்டிருக்கிறது என்றும், இதனால் சுமார் 26 கப்பல்கள் துறைமுகத்தில் தங்கு கின்றன என்றும், கப்பல் சொந்தக்காரர்கள் இரண்டொரு தவணை தந்து, நிலைமை சரியாகாவிட்டால் கப்பலைத் திருப்பிக்கொண்டு போவதாக அச்சுறுத்தியுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

சர்க்கார் ஊழியருக்கு நிவாரணம்

மாதம் ரூ. 300-க்குக் குறைவாகச் சம்பளம் பெறும் சர்க்கார் ஊழியருக்கு ரூ. 5 பஞ்சப்படி தருவது என்று இலங்கை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு வருடந்தோறும் ரூ. 5 கோடிவரை அதிகச் செலவு ஆகுமாம்.

மேலும் சர்க்கார், 5 பேர்கள அடங்கிய சம்பளக் கமிஷன் ஒன்றும் நியமித்துள்ளது.

பெங்களூரில் தடை யுத்தரவு

விமானத் தொழிற்சாலை ஊழியர் வேலைநிறுத்த எதிரொலி

பெங்களூர், டிச. 1—

பெங்களூரில் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை ஊழியர் வேலைநிறுத்தம் செய்துள்ள காரணத்தினால், நகரைச் சுற்றி 5 மைல்வரையிலும் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதம் இருந்த இருவரும், சங்க நிர்வாகிகளான நால்வரும் உள்பட 70 பேர், தடையை மீறியதாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உண்ணாவிரதம் இருந்தவர்கள் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக அவர்கள்மீது வழக்கு பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

இவர்களின் தியாகத்தைப் பழிக்கும் தன்மையில் அரசாங்கம் 'தற்கொலை' என்ற பெயரால் கேவலப்படுத்துவதை இந்துஸ்தான் விமான ஊழியர்கள் சங்கப் பொதுக்கூட்டம் பலமாகக் கண்டித்துள்ளது.

கைத்தறித் துணிகளுக்குத் தரப்படும் தள்ளுபடி

படிப்படியாகக் குறைக்கப்பட்டு ஓராண்டில் ரத்தாகுமாம்

சென்னை, டிச. 1—

கைத்தறித் துணிகள்மீது விற்பனையில் தரப்படும் தள்ளுபடி முறை ரத்து செய்யப்படும் என்று மத்திய அமைச்சர் கனுங்கோ தெரிவித்துள்ளார்.

படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வந்து இன்னும் ஓராண்டுக் காலத்தில் முழுமையும் ரத்து செய்யப்பட்டுவிடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தள்ளுபடி முறையினால் ஏறக்குறைய ரூ. 4 கோடி ஆண்டுதோறும் செலவாகிறதாம்.

இரண்டாவது திட்டத்தில் ரூ. 8 கோடி கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

முதலீடுகளுக்கு அதிக உதவியளிப்பது நல்ல பலனைத் தந்துள்ளதாம்.

தள்ளுபடி தராவிட்டால்கூட கைத்தறித் துணி மற்றவைகளுடன் போட்டியிடக்கூடிய நிலையில் உள்ளதாம்.

'அரசாங்கமே புத்தகங்களை வெளியிடுவது பிற்போக்கானது'

தெ. இ. ஆசிரியர் சங்க எதிர்ப்பு

சென்னை, டிச. 1—

பாடப் புத்தகங்களை சர்க்காரே வெளியிடுவது பிற்போக்கான நடவடிக்கையென்றும், அரசாங்கத்தின் கொள்கையை மறைமுகமாகத் திணிப்பதாகுமென்றும் தென்னிந்திய ஆசிரியர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கருத்து தறிவிக்கப்பட்டிருக்கிறது.

'காலனி ஆதிக்கம் ஒழிந்தாலன்றி உலகில் அமைதி ஏற்படாது'

இந்தோனேஷியப் பிரதமர் எச்சரிக்கை

ஜாகர்த்தா, டிச. 1—

"ஐ. நா. மூலமே இந்தோனேஷியா நியூகினியா தகராறைத் தீர்த்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை; அடுத்த கட்டம் மிகவும் முக்கியமானது; இந்தோனேஷியா தனது சொந்த பலத்தைக் கொண்டு போராடுவதுதான் அந்தக் கட்டம்!

"நியூகினியாவை ஹாலந்து சட்ட விரோதமாக ஆக்கிரமித்து வைத்துக்கொண்டுள்ளது. உலக அமைதி என்பது காலனி ஆதிக்கம் ஒழிந்தாலன்றி ஏற்படாது என்பதை ஹாலந்து உணரவேண்டும்"

என்று இந்தோனேஷியப் பிரதமர் கூறியுள்ளார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

புதுடில்லி, நவ. 30—

இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் 1956 செப்டம்பர் முதல் 1957 ஆகஸ்ட் முடிய, இந்நாட்டில் பல்வேறு தொழில்களிலும் மொத்தம் ரூ. 11,08,58,000 முதலீடு செய்திருக்கிறதாம்.

இந்தத் தொகையில், தனியார் தரப்புத் தொழில்களில் ரூ. 10,76,44,000 போக மீதியுள்ள தொகை சர்க்கார் தரப்புத் தொழில்களிலும் முதலீடு செய்யப்பட்டிருக்கிறதாம்'

கழகக் கூட்டம்

★

மேலூர்:
(மதுரை மாவட்டம்)
மந்தைத் திடலில்
4—12—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
எஸ். எஸ். தென்னரசு
எஸ். முத்து எம். சி.
(மாலை 4-மணிக்கு சிலம்ப விளையாட்டுகளுடன் ஊர்வலம் நடைபெறும்)

சேலம் மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

"சேலம் மாவட்டத்தில் தி. மு. கழக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, ஆனால் முறைப்படி மாவட்டக் கழகச் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதியால் செயற்குழுத் தேர்தல் நடைபெறாத கிளை கழகங்களைச் சேர்ந்த அமைப்பாளர்கள், உடனடியாக மாவட்ட கழகத்துக்கு எழுதி, கிளைகளை அமைத்துக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அடுத்த ஆண்டு பிப்ரவரி மூற்பகுதியில் சேலம் மாவட்ட 3-வது தி. மு. கழக மாநாடு நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுவதால் எல்லாக் கிளைகளின் அமைப்பாளர்களும் உடனடியாகக் கழகங்களை மாவட்டக் கழகத்திலும், தலைமைக் கழகத்திலும் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்"

என, மாவட்டத் துணைச் செயலாளர் பி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

நெய்வேலிப் பகுதியில் நிலமிழந்தோருக்குப் புதுவாழ்வு

கடலூர் அருகே ஆறு காலனிகள்

கடலூர், டிச. 1—

நெய்வேலிப் பிரதேசத்தில் சுரங்க வேலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்குப் புதிய வீடு, நிலம் வழங்கும் திட்டம் ஒன்றினை, கடலூர் அருகே முதன்மந்திரி காமராசர் துவக்கிவைத்தார்.

திட்டத்திற்காக, 'நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்' ரூ. 10 இலட்சம் வரை செலவிட வேண்டியிருக்கும்.

மொத்தமாக நெய்வேலிப் பிரதேசத்தில் 26,750 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய டெல்லி சர்க்கார் அனுமதி வழங்கியிருப்பதாகவும் இதில் சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் நீங்கலாக, கடலூர், விருத்தாசலம் தாலுகாக்களில் மட்டும் தனிப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் நிலம் 20,000 ஏக்கர் என்றும் நிறுவனத்தின் நிர்வாக டைரக்டர் டி. எம். எஸ். மணி கூறினாராம்.

நிலம் இழந்து இடம் பெயருவோருக்குப் புனர்வாழ்வு தரும் பொறுப்பை கார்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் என்றும், சென்னை சர்க்கார் இதற்காக சுமார் 11,000 ஏக்கர்வரை காட்டுப் பிரதேசம் இலவசமாகத் தந்துள்ளனர் என்றும் இந்த இடத்தில் ஆறு காலனிகள் அமைக்கப்பட்டு, நெய்வேலியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வுதர ஏற்பாடு செய்யப்படும் என்றும், இந்தக் காலனிப் பிரதேசத்தில் பயிரிடக்கூடிய நிலம் 8000 ஏக்கர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"நெய்வேலியில் இரண்டு ஏகர் நிலம் இழந்தவர்களுக்கு இங்கு நஷ்ட ஈட்டுடன் அதே அளவு நிலம் தரப்படும்; அதற்குமேல் அங்கு தந்தவர்களுக்குக் கூட இரண்டு ஏக்கர்தான் கிடைக்கும் சாதாரண வீடுகளை இழந்தோருக்கு 5 சென்ட் நிலமும் 'பக்கா' வீடுகளை இழந்தோருக்கு, 10 சென்ட் நிலமும் தரப்படும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

டெல்லியின் ஓர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென் மண்டலம் வேகுவாகப் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படும் என நம்புகிறேன்; நெய்வேலி போன்ற திட்டங்கள் இடையூறு இன்றி நிறைவேற வழிவேண்டும்.

இந்த விழாவிற்கு முதன் மந்திரி காமராசர் தலைமை வகித்திருக்கிறார்.

பதிலளித்த டெல்லி மந்திரி கனுங்கோ கூறியதாவது:—

"தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறீர்கள். ஒரு ஐந்தாண்டுக் காலத்தில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், தென்னாட்டு வளர்ச்சியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

"இந்தியா முழுவதிலும் உள்ளவர்கள் தாங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர்; காரணம், நமது தேவைகள் மிக அதிகமானவை—அவசரமானவை—கணக்கிலடங்காதவை. அதனால், இன்னும் கொஞ்ச காலத்திற்கு—அதாவது 10 ஆண்டுக் காலத்திற்கு—இரண்டு திட்ட காலத்திற்கு நாம் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவே தோன்றும்"

என்று, முழுப் பூசணியைத் சோற்றில் மறைக்கிற மாய்மாலம் பேசினாராம்!

இலஞ்சப் பழக்கம் தாண்டவமாடுகிறதாம்!

ஒழிப்பதற்கு ஆள் தேடுகிறார் மத்திய மந்திரி நந்தா!

கித்வாய் நகர், நவ. 30—

"நாட்டில் இலஞ்சப் பழக்கமும், கலப்படமும் தாண்டவமாடுகின்றனவாம்!

இதனால் நாட்டின் ஒழுக்கம் மிகத் தாழ்நிலைக்குச் சென்றுவிட்டதாம்!

எனவே, 'பாரத் சேவக் சமாஜ்'த்தினர், இந்தக் கொடுமைகளை அகற்ற முன்வர வேண்டும்"

என்று, திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா, இங்கு அந்த சமாஜத்தின் ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சேரி ஒழிப்பு நஷ்டஈடு தராதே!

நேரு கூறுகிறார்

கான்பூர், நவ. 30—

"சேரிகள் அமைந்துள்ள இடத்தைக் கைப்பற்றும் போது, அந்த இடச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு மிகக் குறைவாகவே தரப்பட வேண்டும்; சில சந்தர்ப்பங்களில் நஷ்டஈடே தரக்கூடாது; ஏனெனில், இவர்கள் பல ஆண்டுக்காலமாக, சேரிகள் மூலம் ஏழைகளிடமிருந்து பணம் சம்பாதித்து வந்துள்ளனர்"

என்று, பண்டித நேரு இங்கு கூறியிருக்கிறார்.

'பாரத் சேவக் சமாஜ்' கூட்டம் ஒன்றில், பேசிய அவர், "இந்தச் சேரி ஒழிப்பு வேலையைத் தீவிரமாக மக்களும், சமாஜத்தினரும் மேற்கொள்ள வேண்டும்; மனித சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாராம்!

"நான் சேரிகளை மிகவும் வெறுக்கிறேன்; சேரிகளை எல்லாம் கொளுத்தி விட வேண்டும் என்று ஒருமுறை இங்கு நான் கூறினேன். அப்போதுதான், அந்த இடங்களில் புதிய தொழிலாளர் குடியிருப்புகள் எழுப்ப முடியும்"

என்றும் பண்டித நேரு கூறியிருக்கிறார்.

மாநிலங்களுக்கு முன்னறிவிப்பா?

பணத்தைப் பெரிதென மதிப்பது முறையானதல்லவாம்!

'உழைப்புதான் உறுதியானது' என்கிறார் பண்டிதர்

புதுடில்லி, நவ. 30—

"பணம் வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை மாநில சர்க்கார்கள் கேட்கின்றன; ஆனால், அவ்விதம் பெறும் பணத்தை இலாபகரமாக செலவிடுவதற்கு நல்ல நிர்வாக இயந்திரம் அவைகளிடம் இல்லை.

அதிகப்படியான பணமில்லாமல்—உதாரணமாக—உணவு உற்பத்தியை சடும் உழைப்பின் மூலம் அதிகரிக்க முடியும்.

"பணம் ஒரு ஜீவாதார உறுப்பாகும்; ஆனால் வாழ்க்கையையும்விடக் குறைந்த பலனுள்ளதாகும்"

என்று, பண்டித நேரு நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உணவுப் பற்றுக்குறை

டெல்லி முடிவு என்ன?

சென்னை, டிச. 1—

சென்னையில், ஆண்டுக்கு $1\frac{1}{2}$ இலட்சம் டன் உணவுத் தானியம் பற்றுக்குறையாக உள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில், சென்னையிலிருந்து மட்டும் இரயில் மூலம் $2\frac{1}{2}$ இலட்சம் டன் உணவுத் தானியம் கேரளத்திற்கு ஏற்றுமதியாகியுள்ளதாம்.

சென்னை மாநிலத்திலிருந்து அதிகப்படியான உணவுத் தானியம் கேரளத்திற்குச் செல்வதை மத்திய அரசாங்கத்திற்கு சென்னை சுட்டிக்காட்டி, இதனைக் கட்டுப்படுத்த வேண்டும், என்று கோரியுள்ளதாம்.

இதேநிலை பல மாநிலங்களில் உள்ளது என்றும், எல்லா மாநிலங்களுக்கும் ஏற்ற முறையில் கொள்கையை நிர்ணயிக்க மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.